T-UN-688

உ

சிவமயம்

# தமிழ் அருச்சனை வழிபாடு

திருமயிலை கபாலீச்சரம்

சென்னை

வெளியீடு :

**அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில்**

திருக்கபாலீச்சரம்

மயிலாப்பூர், : : சென்னை-600004.

**20—1—1974**

முதற்பதிப்பு : 1971
2-ம் பதிப்பு : 1974

உ

திருச்சிற்றம்பலம்

# வேண்டுகோள்

"அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு என்றார் தூமறை பாடுவாயார்"
—சேக்கிழார்.

ஆண்டவன் திருவடியை நினைவும், சொல்லும் செயலும் ஒன்றுபட்டு அன்புடன் வழிபடுவது வழிபாடு. நினைவால் ஆண்டவன் திருவருளையும், அவன்பால் வேண்டும் வேண்டு கோளையும், அதற்காக நம்மிடம் அமையவேண்டிய குணங்களையும் நினைத்தல்வேண்டும், வாயினால் திருமுறை முதலிய தமிழ் மாமறையினை ஓதுதல் வேண்டும், கையினால் பூ, வில்வம், அறுகு, துளசி முதலியவற்றுள் ஒன்றினை எடுத்துத் திருவடியில் சேர்த்தல் வேண்டும். இதுவே நிறைந்த வழிபாடு. ஓதுமந்திரம் அவரவர் தாய் மொழியிலேயே இருத்தல் வேண்டும் அதுவே மெய்ப்பயனைத்தரும். எல்லாருக்கும் நன்கு விளங்கும்.

தெய்வ மணங்கமழும் செந்தமிழ்ப் பாக்களால் இறைவனை வழிபடும் நன்முயற்சி இவ்வாண்டின் விடுதலை நாள் தொட்டுத் தமிழக அரசின் அறநிலையத் துறையால் சிறப்பாகச் செயற்படத் தொடங்கியுள்ளது. மொழிக்கு மொழி தித்திப்பாகும் மூவர் சொலும் தமிழ் கேட்கும் திருச்செவியுடைய ஈசற்கு இன்தமிழால் வழிபாடு செய்வது இன்பந்தருவதாகும்.

அதற்கு மாறாக அயன்மொழி மந்திரங்களால் இப்பொழுது வழிபாடு நடக்கின்றது. அது தமிழ்நாட்டிற்கு ஒவ்வாது. தமிழிலேயே பூசனை செய்து எல்லாரும் கேட்டு இன்புற வேண்டுமென்ற முயற்சியின் விளைவாக 'பிள்ளையார் வழிபாடு', 'முருகப்பெருமான் வழிபாடு' 'சிவபெருமான் வழிபாடு' 'உமையம்மை வழிபாடு' முதலிய போற்றிகளைச் சேர்த்து திருமயிலைக் கபாலீச் சரத்தின் சார்பில் தமிழ் வழிபாடு என்னும் இச்சிறு நூல் வெளியிடப்பெறுகின்றது.

அன்பர்கள் இவ்வருந்தமிழ் வழிபாட்டிற்கு ஆதரவு தந்து இறைவனை வழிபாடு செய்து நலம் பெறுவார்களாக!

ஆலய நிருவாகிகள்.

உ

# பிள்ளையார் வழிபாடு

---

திருச்சிற்றம்பலம்

**விண்ணப்பம்**

சிவபெருமான் திருவருளால் நிகழும்...............ஆண்டு .........மாதம்.........கிழமை..........நாளும் கோளுங் கூடிய நன்னாளில்......மகன்.......இன்னாருக்குப் பிள்ளையார் பெருங் கருணையால், வெற்றியும் வீரமும், புகழும், பொருளும், போகமும் எந்நாளும் மேன்மேலும் பெருகுக என்று வேண்டிக் கொண்டு இம்மலர்களால் திருவடிகளில் பூசனை புரிகின்றேன்.

---

ஏனைய கடவுளர் திருமுன்னும் அவர்கள் திருப்பெயரை இணைத்து இதனையே முதற்கண் விண்ணப்பமாகச் (சங்கல்ப மாக) செய்க.

## நூற்றெட்டுப் போற்றி

ஓம்எனும் பொருளாய் உள்ளோய் போற்றி
பூமனும் [1]பொருள்தொறும் பொலிவாய் போற்றி
அகரம் முதலென ஆனாய் போற்றி
அகர உகர ஆதி போற்றி

மகரமாய் நின்ற வானவ போற்றி
பகர்முன் னவனும் பரனே போற்றி
மண்ணாய் விண்ணாய் மலர்ந்தாய் போற்றி
கண்ணுள் மணியாய்க் கலந்தாய் போற்றி
நீர்தீக் காற்றாய் நின்றாய் போற்றி

கார்[2] குளி ராகக் கனிந்தாய் போற்றி
பகலவன் நிலவாய்ப் பரந்தாய் போற்றி
நிகர்[3]மீன் கணமாய் நிலைத்தாய் போற்றி
மழைபொழி இமய வல்லிசேய் போற்றி
தழைசெவி எண்தோள் தலைவ போற்றி

---

1, பூம(ன்)னும் - பூமியில் இருக்கின்ற. 2. கார் – மேகம் 3. நிகர்-ஒளி.

திங்கட் சடையோன் செல்வ போற்றி
எங்கட் கருளும் இறைவா போற்றி
அறுமுகச் செவ்வேட்கு அண்ணா போற்றி
சிறுகண் களிற்றுத் திருமுக போற்றி
செம்பொன் மேனிச் செம்மால் போற்றி

உம்பர் போற்றும் உம்பர்[1] போற்றி
பண்ணியம்[2] ஏந்துகைப் பண்ணவ போற்றி
எண்ணிய எண்ணியாங் கிசைப்பாய் போற்றி
அப்பமும் அவலும் கப்புவாய் போற்றி
முப்புரி நூல்மார்பு அப்பா போற்றி

எள்ளுருண் டைபொரி ஏற்போய் போற்றி
தெள்ளூறு தெவிட்டாத் தேனே போற்றி
மூவர் மொழி[3]யிடம் மொழிந்தாய் போற்றி
தேவர்க் கரிய தேவா போற்றி
மாலுக் கருளிய மதகரி போற்றி

பாலெனக் கடல் நீர் பருகினாய் போற்றி
பாரதம் எழுதிய பரூஉக்கர போற்றி
மாரதம் அச்சொடி மதவலி[4] போற்றி
மாங்கனி அரன்பால் வாங்கினோய் போற்றி
ஈங்கினி எம்பால் எழுந்தருள் போற்றி

கரும்பா யிரங்கொள் கள்வா போற்றி
அரும்பொரு ளேயெம் ஐயா! போற்றி
திணைபால்[5] கடந்த தேவே போற்றி
புணை[6]யாய் இடர்க்கடல் போக்குவோய் போற்றி
பேழை வயிற்றுப் பெம்மான் போற்றி

---

1. உம்பல் - யானை. 2. பண்ணியம் - பண்ணியாரம்; பலகாரம். 3. மூவர் மொழி-தேவாரம். 4. மதவலி மிகுந்த வலிமையுடையவன். 5. திணை பால் - குலமும் வகுப்பும். 6. புணை - தெப்பம்.

ஏழைக் கிரங்கும் எம்மிறை போற்றி
அடியவர் உள்ளம் அமர்ந்தாய் போற்றி
அடிமலர் எம்தலை அணிவாய் போற்றி
திருநீற் றொளிசேர் செம்மால் போற்றி
இருவே றுருவ ஈசா போற்றி

உள்ளத் திருளை ஒழிப்பாய் போற்றி
கள்ளப் புலனைக் கரைப்பாய் போற்றி
நம்பியாண் டார்க்கருள் நல்லாய் போற்றி
எம்பிரா னாக இசைந்தாய் போற்றி
உருகுவோ ருள்ளத் தொளியே போற்றி

பெருகருள் சுரக்கும் பெருமான் போற்றி
தம்பிக்கு வள்ளியைத் தந்தாய் போற்றி
உம்பர்[1]கட் கரசே ஒருவ போற்றி
பிள்ளையார் பெயர்கொண் டுள்ளாய் போற்றி
வள்ளலாய் நலங்கள் வழங்குவாய் போற்றி

மூவா சாவா முத்தா போற்றி
ஆவா எங்களுக் கருள்வாய் போற்றி
தமிழ்ச்சுவை சார்திருச் செவியாய் போற்றி
அமிழ்தாய் எம்மகத் தானாய் போற்றி
மழவிளங் களிறே மணியே போற்றி

குழவியாய்ச் சிவன்மடி குலவுவோய் போற்றி
பெருச்சா ளியூரும் பிரானே போற்றி
நரிச்செய லார்பால் நண்ணாய் போற்றி
செந்தா மரைத்தாள் தேவா போற்றி
நந்தா மணியே நாயக போற்றி

இருள்சேர் இருவினை எறிவாய் போற்றி
கரிமுகத் தெந்தாய் காப்போய் போற்றி
ஆங்கா ரம்முளை அறுப்பாய் போற்றி

---

1. உம்பர் - தேவர்.

பாங்கார் இன்பப் பராபர போற்றி
கற்றவர் விழுங்கும் கனியே போற்றி

மற்றவர் காணா மலையே போற்றி
சொல்லொடு பொருளின் தொடர்பே போற்றி
கல்லும் கரைக்க வல்லோய் போற்றி
தொந்தி வயிற்றுத் தந்தி போற்றி
முந்திய பொருட்கும் முந்தியோய் போற்றி

ஐந்துகை யுடைய ஐய போற்றி
ஐந்தொழில் ஆற்றும் அமர போற்றி
அருளாய் அருள்வாய் ஆண்டவ போற்றி
தருவாய் மணமலர்த் தாராய் போற்றி
கயமுக[1] அசுரனைக் காய்ந்தாய் போற்றி

மயலறும் இன்ப வாழ்வே போற்றி
ஆனையாய்ப் புழுவாய் ஆனாய் போற்றி
பானை வயிற்றுப் பரமே போற்றி
கடம்[2] பொழி யானைக் கன்றே போற்றி
மடம்ஒழி அறிவின் வளனே போற்றி

பாலொடு தேனும் பருகுவோய் போற்றி
மேலொடு கீழாய் மிளிர்வோய் போற்றி
எய்ப்பில் வைப்பாய் இருந்தோய் போற்றி
மெய்ப்பொருள் வேழ முகத்தாய் போற்றி
நல்லார்க் கெட்டும் நாதா போற்றி

பொல்லா மணி[3]யே புராதன போற்றி
அறிவின் வரம்பை அகன்றாய் போற்றி

---

1. கயமுகம்-யானை முகம், 2. கடம்-மதநீர். 3. பொல்லா மணி: பொள்ளாமணி - துளைக்கவொண்ணாத முத்து, இங்கே அத்தகைய யானைமுகக் கடவுளைக் குறித்தது ஆகுபெயர். 'போதாய்ந் தணைவதென்று கொலோஎன் பொல்லா மணியைப் புணர்ந்தே' எனத் திருவாசகத்திலும் வருதல் காண்க.

குறிகுணங் கடந்த குன்றே போற்றி
எட்டு வான்குணத் தெந்தாய் போற்றி
கட்டறு களிற்று முகத்தோய் போற்றி

95\. மலரில் மணமாய் வளர்ந்தாய் போற்றி
அலர்கதிர் ஒளியின் அமர்வோய் போற்றி
ஓங்கார முகத் தொருத்தல்[1] போற்றி
ஏங்கா துயிர்க்கருள் இயற்கை போற்றி
எண்ணும் எழுத்துமாய் இசைந்தாய் போற்றி

100\. பண்ணும் பயனுமாய்ப் பரந்லாய் போற்றி
அருவே உருவே அருவுரு போற்றி
பொருளே பொருளின் புணர்ப்பே போற்றி
புகர்முகக் களிற்றுப் புண்ணிய போற்றி
அகலிடம் நிறைய அமர்ந்தோய் போற்றி

101\. செல்வம் அருள்க தேவா போற்றி
நல்லன எமக்கருள் நாயக போற்றி
ஆக்கமும் ஊக்கமும் அருள்வாய் போற்றி
ஆடுங் கணபதி உன் அடியிணை போற்றி

திருச்சிற்றம்பலம்

———

1\. ஒருத்தல்-யானை.

# முருகப்பெருமான் வழிபாடு

---

## நூற்றெட்டுப் போற்றி

திருச்சிற்றம்பலம்

அரு[1]வாம் உருவாம் முருகா போற்றி
திருவார் மறையின் செம்பொருள் போற்றி
ஆறு முகத்தெம் அரசே போற்றி
மாறுகொள் சூரரை வதைத்தாய் போற்றி

இருள்கெடுத் தின்பருள் எந்தாய் போற்றி
உருள்பூங் கடம்பணி உர[2]வோய் போற்றி
ஈசற் கினிய சேயே போற்றி
மாசறு திருவடி மலரோய் [3]போற்றி
உறுநர்த்[4] தாங்கும் உறவோய் போற்றி

செறுநர்த்[5]தேய்த்த செவ்வேள் போற்றி
ஊனி[6]ல் ஆவியாய் உயிர்ப்போய் போற்றி
கானில் வள்ளியின் கணவ போற்றி
எழில்கொள் இன்ப வாரிதி போற்றி
அழிவிலாக் கந்தனும் அண்ணல் போற்றி

---

1. அரு - உருவில்லாதது. 2, உரம் – ஊக்கம்; வலிமை.
3. சேய் - குழந்தை, 4. உறுநர் - சேர்ந்தோர்; தொண்டர்.
5. செறுநர் - பகைவர். 6, ஊன் - உடம்பு.

ஏறு மயிலூர்ந் தேகுவாய் போற்றி
கூறுமன் பர்க்குக் குழைவாய் போற்றி
ஐயனாய் உலகை ஆக்குவாய் போற்றி
செய்யமே னியனே தேவே போற்றி
ஒருவனாய் உலகெலாம் ஒளிர்வாய் போற்றி

பருவம் முதிராப் பண்பே போற்றி
ஓவற இமைக்கும் ஒளியே போற்றி
மாமுதல் தடிந்த மறவ போற்றி
ஔவியம்[1] அறுத்தோர்க் கருள்வோய் போற்றி
தெய்வம் எலாந்தொழும் செய்யாய் போற்றி

அஃகுதல்[2] இல்லா அறிவே போற்றி
வெஃகுதல்[3] அற்றார் விளக்கே போற்றி
கந்தா மணமார் கடம்பா போற்றி
நந்தா[4] விளக்கே நாயக போற்றி
காப்பாய் படைப்பாய் கழிப்பாய் போற்றி

மூப்பீ றற்ற முதல்வா போற்றி
கிள்ளை மொழியுமை பிள்ளாய் போற்றி
கள்ளப் புலனைக் களைவாய் போற்றி
கீழறும் அடியர் கிழவோய் போற்றி
ஏழுல குந்தொழும் இறைவா போற்றி

குன்றும் குழைதோட் குமர போற்றி
என்றும் இளைய ஏறே போற்றி
கூம்புகைத் தேவர் கோவே போற்றி
பாம்பணி சிவனார் பாலக போற்றி
கெண்டைக் கண்ணியர் கேள்வ போற்றி

---

1. ஔவியம். பொறாமை. 2. அஃகுதல் - குறைதல்; தன்னிலை குன்றுதல் 3. வெஃகுதல் - விரும்புதல்; அவாக் கொள்ளல் 4. நந்தா - கெடாத.

அண்டினர்க் கருளும் அங்கண போற்றி
கேடில் முருகனுய்க் கிளர்ந்தாய் போற்றி
வீடில்[1] வீடருள் விமல போற்றி
கைவேல் கொண்ட காவல போற்றி
நைவேற்[2] க்ருள்வாய் நாயக போற்றி

கொடைக் கடன் கொண்டகுழக[3] போற்றி
படைக்கடல் தலைவ பரனே போற்றி
கோதில் அமிழ்தே குருமணி போற்றி
போதில்[4] அமர்ந்த பொன்னே போற்றி
சிவபிரான் கண்வரு சேயே போற்றி

நவ[5]சரவணத்தில் நகர்ந்தாய் போற்றி
அறுவுரு அமைந்தே ஆடினுய் போற்றி
அறுமீன் பாலுண் அமர போற்றி
உருவுமை சேர்க்க உற்ருய் போற்றி
பெருமை பிறங்கு பெரியோய் போற்றி

நான்முக ஊனச்சிறை நாட்டினுய் போற்றி
மான்மகள் வள்ளியை மணந்தாய் போற்றி
செங்கண் கடாவைச் செலுத்தினுய் போற்றி
அங்கண் குறிஞ்சிக் கரசே போற்றி
இறைவனுக் கரும்பொருள் இசைத்தாய் போற்றி

மறையிடைப் பொருளாய் வளர்ந்தாய் போற்றி
பரங்குன் றமர்ந்த பரம்பர போற்றி
திருச்செந்தில் வளர் சேவக போற்றி
ஆவி னன்குடி ஆண்டாய் போற்றி
மேவிஏ ரகம்வாழ் மிக்கவ போற்றி

---

1. வீடு+இல்=வீடில்; விடுதல் இல்லாத; அழியாத. 2. நை வேற்கு - வருந்துகின்ற எனக்கு. 3. குழகன் - இளமையுடையவன். 4. போது - தாமரைமலர். 5. நவம் - புதுமையான.

குன்றுதோ றாடும் குழந்தாய் போற்றி
துன்று பழமுதிர் சோலையாய் போற்றி
திசைமுகம் விளக்கும் செம்முக போற்றி
இசைபொரு வேள்வி இன்முக போற்றி
செங்களம்[1] ஓர்க்கும் திருமுக போற்றி

மங்கல மான வானவ போற்றி
வள்ளிபால் நகைகொள் மாமுக போற்றி
திங்களின் ஒளிரும் சீர்முக போற்றி
ஆர்வலர்[2] ஏத்த அருள்முக போற்றி
சீர்வளர் அழகின், செல்வா போற்றி
மணிமுடி புனையா றணிமுடி போற்றி

துணை[3]யடி தொழுவார்க் கணைவாய் போற்றி
செவியீ ராறுடைச் செம்மால் போற்றி
கவித்தொடை புனைதோட் கந்தா போற்றி
பன்னிரு கண்ணுடைப் பண்ணவ போற்றி

என்னிரு கண்ணின் இலகுவோய் போற்றி
பொருவில் ஒருவனும் புலவ போற்றி
அருண கிரிக்கருள் அமல போற்றி
நக்கீ ரற்கருள் நாதா போற்றி
தக்கசங் கத்தமிழ் தந்தாய் போற்றி

குமர குருபரற் கருளினை போற்றி
அமரர் அஞர்களை அளியோய் போற்றி
பந்த[4]பா சங்[5]களைப் பறிப்போய் போற்றி
கந்த புரிவாழ் வுகந்தோய் போற்றி
தெய்வானை யம்மையைச் சேர்ந்தோய் போற்றி

---

1. செங்களம்–போர்க்களம் 2. ஆர்வலர்-அன்புள்ளவர்.
3. துணை - இரண்டு. 4. பந்தம் - கட்டு; விடாப்பிடிப்பு
5. பாசம் - தொடர்புள்ள அன்பு.

பொய்யிலா மனத்துட் புகுவோய் போற்றி
கோழி வெல்கொடிக் கோவே போற்றி
ஊழிதோ றூழி உள்ளாய் போற்றி
செய்யாய்[1] சிவந்த ஆடையாய் போற்றி
மெய்யெலாம் வெண்ணீ றணிவோய் போற்றி

மேவலர்[2] மடங்கலாம்[3] விசாக போற்றி
மூவர்கள் போற்றும் முத்த போற்றி
தேவர்கள் சிறைமீள் சீர்வலாய் போற்றி
சேவலும் மயிலும் சேர்த்தோய் போற்றி
போர்மிகு பொருந[4] புரவல[5] போற்றி

ஏர்மிகு இளஞ்சேய் எம்மிறை போற்றி
தாரகற் கொன்ற தாழ்விலாய் போற்றி
பாரகம் அடங்கலும் பரவுவோய் போற்றி
தமிழ்மொழி இன்பில் தழைப்பாய் போற்றி
அமிழ்திற் குழைத்த அழகா போற்றி

கல்வியும் செல்வமும் கனிந்தருள் போற்றி
பல்வகை வளனும் பணித்தருள் போற்றி
இன்பார் இளைய ஏந்தால் போற்றி
சிங்கார வேலனே உன் சீரடி போற்றி.

திருச்சிற்றம்பலம்

---

1. செய்யாய்-சிவந்த நிறத்தையுடையவனே 2. மேவலர் பகைவர், 3. மடங்கல் - சிங்கம், 4. பொருநன் - போர் வீரன். 5. புரவலன்-பாதுகாப்போன்; தலைவன்.

# சிவபெருமான் வழிபாடு

---

## நூற்றெட்டுப் போற்றி

திருச்சிற்றம்பலம்

6-ஆம் திருமுறை திருத்தாண்டகம்

1. வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி !
கயிலை மலையானே போற்றி ! போற்றி !

9. பிச்சாடல் பேயோடு உகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி ! போற்றி !

17. மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி ! போற்றி !

25. வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்கும் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி! போற்றி!

33. ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி! போற்றி!

41. சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி!
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி! போற்றி!

49. பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும்சொல் லானாய் போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி! போற்றி!

57. இமையாது உயிராது இருந்தாய் போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாகம் ஆகத் தணைத்தாய் போற்றி
ஊழியே ழான ஒருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி! போற்றி!

65. மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் தொழும் தேவே போற்றி
சென்றேறி எங்கும் பரந்தாய் போற்றி
ஆவாய் அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி! போற்றி!

73. நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியும் இகலிப் போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி! போற்றி!

81. உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி

பண்ணு ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணு யுலகுக்கு நின்ருய் போற்றி
கயிலே யலேயானே போற்றி! போற்றி!

—6ம் திருமுறை: அப்பர்.

89. ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாரு போற்றி
அண்ணு மலேஎம் அண்ணு போற்றி
கண்ணர் அமுதக் கடலே போற்றி
ஏகம் பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு ஆனுய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி

97. மற்ருேர் பற்றிங் கறியேன் போற்றி
குற்ரு லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலேஎம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி

102. கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழ்இரு மூவர்க்(கு)
அத்திக் கருளிய அரசே போற்றி
தென்ன டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

108. கல்லாடை புனேந்தருள் கபாலி போற்றி
நல்லார் முடிக்கணி நாதா போற்றி.

—திருவாசகம்: மாணிக்க வாசகர்

திருச்சிற்றம்பலம்

———

உ

# உமையம்மை வழிபாடு

---

## நூற்றெட்டுப் போற்றி

திருச்சிற்றம்பலம்

திருநிலை நாயகி தேவி போற்றி
கருந்தார்க் குழலுமை கௌரி போற்றி
மங்கள நாயகி மாமணி போற்றி
எங்கும் நிறைந்த இன்பொருள் போற்றி

இளமை நாயகி எந்தாய் போற்றி
வளமை நல்கும் வல்லியே போற்றி
யாழைப் போல்மொழி யாயே போற்றி
பேழை வயிற்றனைப் பெற்றாய் போற்றி
பால்வளை நாயகி பார்ப்பதி போற்றி

சூல்கொண் டுலகெலாம் தோற்றினாய் போற்றி
அறம்வளர் நாயகி அம்மே போற்றி
மறங்[1]கடி கடைக்கண் மனோன்மணி போற்றி
போகம் ஆர்த்த பொற்கொடி போற்றி
பாகம் பிரியாப் பராபரை போற்றி

உலகுயிர் வளர்க்கும் ஒருத்தி போற்றி
மலர்தல் குவிதலில் மணமலர் போற்றி
கத்து கடல்வரா முத்தே போற்றி
நத்தும் அடியார் நட்பே போற்றி
கற்றவர்க் கின்பக் கடலே போற்றி

---

1. மறம் - தீயசெயல்.

மற்றவர்க் கெட்டா வான்வெளி போற்றி
சிவகாமி யம்மைச் செல்வி போற்றி
புவனப்[1]பொருள்களிற் பொருந்தினாய்போற்றி
வலிதா யத்தமர் வண்தாய் போற்றி
கலி[2]சூ ழாவகைக் காப்பாய் போற்றி

வண்டுவார் குழலி மாதா போற்றி
செண்டா டும்விடைச் சிவையே போற்றி
உண்ணா முலையெம் உயர்தாய் போற்றி
கண்ணார் கமுகுக் கழுத்தாய் போற்றி
பெருந்துறை அரசி பெண்கனி போற்றி

முருந்[3]தேர் முறுவல் முதல்வி போற்றி
வேற்கண் அம்மை மீன்கணி போற்றி
நாற்பெரும் பயன்தரும் நங்காய் போற்றி
மின்னொளி யம்மையாம் விளக்கே போற்றி
மன்னொளிப் பிழம்பாய் வளர்ந்தாய் போற்றி

பச்சை நிறத்துப் பைங்கிளி போற்றி
இச்சைக் கிசைந்த இன்பே போற்றி
குவளைக் கண்மலர்க் கொம்பே போற்றி
தவள[4]வெண் நீற்றோன் தலைவி போற்றி
பவள வரைமேற் பசுங்கொடி போற்றி

துவளிடை சிறுத்த தூயோய் போற்றி
குயில்மொழி மிழற்றும மயிலியல் போற்றி
எயில்மூன் றெரித்த இலங்கிழை போற்றி
தையல் நாயகித் தாயே பேற்றி
வையமீன்[5] றளிக்கும் வளத்தாய் போற்றி

---

1. புவனம் - உலகம். 2. கலி - வறுமை. 3, முருந்து - மயில் இறகின் அடிக்குருத்து. 4. தவளம் - வெண்மை. 5. வையம் ஈன்று அளிக்கும்.

மெய்யுரு கடியர்[1] விருப்பே போற்றி
ஆவுடை நாயகி அன்னாய் போற்றி
தேவிற் சிறந்த திருமகள் போற்றி
தொண்டர் அகத்தமர் தூமணி போற்றி
அண்டர்[2] அருந்தா அமிழ்தே போற்றி

பனங்காட் டூருறை பவளே போற்றி
அனங்காட் டும்நடை அழகி போற்றி
தமிழினும் இனிமை சார்ந்தோய் போற்றி
குமிழ்[3] தா மரைமலர் கொடியிடை போற்றி
அமரி குமரி ஆனாய் போற்றி

இமவான் பெற்ற இளையாய் போற்றி
மலையத் துவசன் மகளே போற்றி
கலையாய்க் கனிந்த தலைமகள் போற்றி
தக்கன் மகளாய்த் தனித்தாய் போற்றி
முக்கட் சுடரின் முதல்வி போற்றி

அலைமகள் அடிபணி நலமகள் போற்றி
கலைமகள் தலைபணி கருத்தே போற்றி
திருவார் கூடலில் திகழ்வாய் போற்றி
அருமறைப் பொருளாம் ஆதி போற்றி
உயிருள் ஓவிய உருவே போற்றி

செயிரி[4]ல் காட்சிச் சேயிழை போற்றி
செந்தமிழ்ப் பாவின் தெளிவே போற்றி
எந்தம் மனத்தில் இருப்பாய் போற்றி
நீலி சூலி நெடுங்கணி போற்றி
மேலை வினைகடி விமலை போற்றி

---

1. மெய்யுருகு அடியார். 2. அண்டர் - தேவர்.
3. குமிழ் - குமிழம்பூ. 4. செயிர் - குற்றம்.

ஒளிக்குள் ஒளியாய் உயர்வாய் போற்றி
வெளிக்குள் வெளியாய் மிளிர்வாய் போற்றி
நீல மேனி வாலிழை போற்றி
கோலக் கொண்டல்[1]நிறத்தாய் போற்றி
மண்முதல் ஐம்பொருள் வளனே போற்றி

பெண்ஆண் அலி[2]யுருப் பெற்றோய் போற்றி
ஆப்பனூர் மேவிய ஆத்தாள் போற்றி
மூப்பிறப் பற்ற முதல்வி போற்றி
எண்குணத் தொருவன் இடத்தோய் போற்றி
பண்கனி மென்சொற் பாவாய் போற்றி

பச்சிளம் பெண்ணாய்ப் பகர்வோய் போற்றி
எச்சம யத்தும் இசைந்தாய் போற்றி
யாழிசைப் பண்ணா யமர்ந்தாய் போற்றி
ஏழிசைப் பயனாய் இருந்தாய் போற்றி
அருள்மலி கண்ணுடை ஆயே போற்றி

மருளினர் சாணா வான்பொருள் போற்றி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை போற்றி
பற்றிலா நற்றவர் பற்றே போற்றி
இழையாய் நன்மை இழைப்பாய் போற்றி
குழை[3]யாய் அகத்தைக் குழைப்பாய் போற்றி

திருநணா மங்கைச் செல்வி போற்றி
உருவும் திருவும் உடையாய் போற்றி
அருந்தவர்க் குதவும் அருளே போற்றி
அருந்துறைத்தமிழின் அமைபொருள்போற்றி
கருநிற ஒளிவளர் கடலே போற்றி

---

1. கொண்டல் - மேகம். 2. அலி - ஆண் பெண் அல்லாத பேடு. 3. குழை - காதணி.

95. பருவரை மருந்தே பகவதி போற்றி
சூளா மணி[1]யே சுடரொளி போற்றி
ஆளாம் அடியர்க் கருள்வாய் போற்றி
மதுரை அரசியாய் வந்தோய் போற்றி
குதிரைச் சேவகன் கொண்டோய் போற்றி

100. உலகம் உவப்புற வாழ்வருள் போற்றி
பலநல் லனநீ படைத்தருள் போற்றி
உயிர்களின் பசிப்பிணி ஒழித்தருள் போற்றி
பயிர்கள் பயன்தரப் பரிந்தருள் போற்றி
செல்வம் கல்விச் சிறப்பருள் போற்றி

101. நல்லன் பொழுக்கம் நல்குவாய் போற்றி
போற்றிஉன் பொன்னடிப் போது போற்றி
போற்றி புகழ்நிறை திருத்தாள் போற்றி
**கற்பக வல்லி யுன் கழலிணை போற்றி.**

திருச்சிற்றம்பலம்

---

1. சூளாமணி - சூலாமணி - துளைக்கமுடியாத முத்து ; மாணிக்கம். சூலல் - துளைத்தல். ல, ள, போலி.

உ

சிவமயம்

கடவுளை நேரே கண்டு, அவனருளால் பல செயற் கருந் தெய்வ வியத்தகு நிகழ்ச்சிகளைச் செய்துகாட்டி, இறைவனருளை நாம் எளிதிற் பெறுமாறு செய்த, அப்பர், சம்பந்தர் சுந்தரர், மாணிக்கவாசகர் முதலான தெய்வ அருளாசிரியர்களும், பொய்கையாழ்வார், பேயாழ்வார் முதலான உண்மை அடியார்களும் அருளிச்செய்த செந்தமிழ்ச் செழும் பாடல்களே, நம் நெஞ்சை நெகிழ்வித்து நம்மை இறைவன் பால் உய்க்குமன்றி, அருள்பெருத ஏனோர் பிறமொழியில் ஆக்கிய உரைகள் நம்மை இறைவன்றன் பேரருளுக்கு உரியராக்க மாட்டா. ஆதலால் இனியேனும் நம் தமிழ் மக்கள் தேவார திருவாசகம் முதலான செந்தமிழ் மாமறைகளை எல்லோரும் அறிய நெஞ்சம் நெக்குருக, ஓதி இறைவற்கு வழிபாடு ஆற்றுமாறு உடனே செய்தல் வேண்டும்.

—மறைமலை அடிகள்

## அருள்மிகு கபாலீசுவரர் ஆலயம்

மயிலாப்பூர் : : சென்னை

### அறங்காவலர் குழு

திரு. C. செல்வ நடராஜ முதலியார்

அறங்காவலர்க் குழுத்தலைவர்

" T. பாலகிருஷ்ணன் J. P.

" R. கோதண்டராமன்

" S. ஜெயராமன்

" G. குசேலர்

அறங்காவலர்கள்

T. நாகராசன் B.Sc.

உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி

பார்க்கர் அச்சகம், சென்னை—1